ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பதிற்றுப்பத்தில் ஆட்சித்திறன்

**முனைவர் ஜோ. அந்தோணி ஜெயஷீலா**
**இணைப் பேராசிரியர், பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**மண்ணிவாக்கம்.**

**ஆய்வின் நோக்கம்**

சங்க இலக்கியங்களில் புறநானூறும், பதிற்றுப்பத்தும் ஆட்சியில் கோட்பாடுகளைக் குறித்துப் பல செய்திகளை வழங்குகின்றன என்றாலும்,சங்க கால அரசியலை மட்டும் குறிப்பிடுவதற்கு என்று தனித்ததொரு அரசியல் நூல் இல்லை என்றே கூறலாம். சங்க கால மன்னர்களின் வரலாற்றை வரிசை முறையாக அறிவதற்கு வாய்ப்பின்றி இருந்தாலும் பதிற்றுப்பத்து வழங்குகின்ற செய்திகளையும், அகப்பாடல்களில் உவமமாக பெறப்படும் செய்திகளையும், பத்துப்பாட்டு வழங்கும் குறிப்புகளையும்கொண்டு அக்கால சேர மன்னர்களின் அரசியல் முறை, வரலாற்று முறை போர் நிலைகளைப் அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் பதிற்றுப்பத்து ஆட்சியில் கோட்பாடுகளைக் குறித்துப் பல செய்திகளை வழங்குகின்றன. பதிற்றுப்பத்தின் வழியாக அறியப்படும் அரசன் அரசனது சின்னங்கள், தலைநகர், மன்னர்கள் சூளூரைத்தல், பாசறை நிலை, படைச்சிறப்புகள், போர் செய்யும் முறைகள், வீரர்களின் போர்த்திறம், வெற்றி பெற்ற பகுதிகள், வெற்றிவாகை சூடுதல், மன்னர்கள் பெற்ற புனைப் பெயர்கள், புனைப்பெயர்களுக்கான காரணங்கள், மன்னர்கள் ஆண்ட காலங்கள் போன்ற உள் தலைப்புகளைப் பற்றி ஆராய்வது இவ்வாய்வின் சுருக்கமாகும்.

**திறவுப் பெயர்கள்**

அரசின் சின்னங்கள், படைகள், அரசியல் அமைப்பு, மரபுப் பெயர்கள், வீரம், போர்.

**முன்னுரை**

அரசு இல்லாத நாடு உயிரற்ற உடலைப் போன்றதாகும். ஒரு நாட்டில் உள்ள அரசு தான் அவர் நாட்டவரின் வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது. ஏனென்றால் ஒரு நாட்டின் வளர்ச்சி நிலை, நாகரீகம் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றைக் குறித்து அறிய வேண்டும் என்றால் அது அந்நாட்டில் உள்ள அரச முறைகளைப் பொறுத்து அமைந்ததாகும்.அரசு என்பது ஆளும் வன்மையை குறிப்பதாகும்.

இத்தகைய அரசால் தான் நாட்டில் சட்டம் வகுத்தல், மக்களை பேணுதல் தவறுக்குத தண்டனை அளித்தல், பிறரை வழிநடத்துதல், கண்ணியத்துடனும், கட்டுக்கோப்புடனும் நாட்டைப் பாதுகாத்தல் போன்ற முறைகள் காணப்பட்டு நாட்டின் ஒழுங்கமைவுகள் ஏற்படும் என்பதை உணர்த்துகின்றது. இதனையே வள்ளுவர்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்று குறிப்பிடுவதை ஒப்பிடலாம். வேட்டையாடுவதில் வல்லமை பகைவர்களை எதிர்த்து போர் செய்வது அவர்களை முறியடித்து வெற்றி பெறும் வீரத்தன்மை, தன்னலம் துறத்தல் என்றுமே பொதுமக்களின் நல்வாழ்வுக்காக பொறுமையுடன் உழைக்கும் உறுதியுள்ளம் நடுநிலைமை தவறாத நல்லொழுக்கமுடைமை நீதி வழங்கும் நேர்மைகுணம் இவை போன்ற உயர்ந்த குணம் உடையவர்களே அரசர்களாக திகழ்ந்துள்ளனர். இவ்வகையில் பதிற்றுப்பத்தில் உள்ள அரசர்களின் ஆட்சி திறனை இங்கு காணலாம்.

**அரசின் சின்னங்கள்**

படைக்கலம், முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூ, மாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, சிங்கம், இடபம், ஆசனம் முதலியன அரசின் சின்னங்கள் ஆகும். அரசின் சின்னங்களைப்பற்றி தொல்காப்பியமும் எடுத்துரைக்கின்றது.

"படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநெறி புரவியம் களிறும் தேரும் தாரும் முடியும்
நேர்வனப் பிறவும் பிரிவுக்குள் தெரிவுகொள்
செங்கோல் அரசர்க்கு உரிய"1

ஆயுதமும், கொடியும், குடையும், முரச வாத்தியமும், சிறந்த நடையையுடைய குதிரையும், யானையும், தேரும், மலர் மாலையும், பொருத்தமான வேறு பல பண்டங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கு உரியனவாகும் என்கிறார்.

**அரசனது படைகள்**

அரசனது படைகள் ஆறாகும். பிங்கலநிகண்டு அரசனது படைகளான ஆறினைப் பற்றி குறிப்பிடுகின்றது.

"வேஎற்றானைவாட்டானைவிற்றானை
தேஎர்த்தானைபரித்தானைகரித்தானை"2

என்று அரசினது படைகளான வேல், படை, வாள் படை, தேர்ப்படை குதிரைப்படை, யானைப்படை போன்றவற்றை எடுத்துரைக்கின்றது. அரசனது தொழில் என்பது

ஊதல், பொருதல், நாடுபுரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல் என்பனவாகும். பிங்கலநிகண்டில்,

“ஓதல் பொருத லுலகு புரத்தல் ஈதல் வேட்டல்

படைபயிறலறுதொழில்“3

என்று கூறப்பட்டுள்ளது.

**அரசியல் அமைப்பு**

அரசியல் என்பது படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் அமைப்புகளை கொண்டதாகும் வள்ளுவர் இதனை

“படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருளேறு”4

என்கிறார். பிங்கல நிகண்டிலும் அரசியல் ஆறு என்று படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று எடுத்துரைக்கின்றது. இதனையே

”படைகுடி கூழமைச்சு நட்பரணென்ன

வுடைய வரசியலாறெனவுரைப்பர்“5

என்கிறது.

**சேர நாட்டுப் பகுதி**

சேர நாட்டுப் பகுதியானது அரபிக் கடலுக்கும், மேற்கு மலைத் தொடருக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். அதாவது குட்டநாடு குடநாடு, பூழிநாடு, குன்றநாடு, மலைநாடு, கொங்கு நாடு, கொரை நாடு என்பன. பிற்காலத்தில் சேர நாட்டுக்கு எல்லைகள் பலவகையாகக் கூறப்படுகின்றது. எண்பது காவதம்பரப்புடைய சேர நாட்டுக்கு வடக்கிற் பழனியும், கிழக்கில் தென்காசியும், மேற்கில் கோழிக் கோடும், தெற்கில் கடற் கோடியும் அமைந்தது ஒரு வகை ஆகும். வடக்கில் பழ நாடு கிழக்கில் செங்கோடு மேற்கில் கோழிக்கோடு. தெற்கில் கடற்கோடி என இடையில் அமைந்த நாடு சேர நாடு என்பது மற்றொரு வகையாகும். வடக்கில் பழனியும், கிழக்கில் பேரூரும், தெற்கிலும், மேற்கிலும், கடலும் எல்லையாகக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் என்பதுசேர நாடு என்பது பிறிதொரு வகையாகும்.

**சேர நாட்டு மலை**

சேர நாட்டு மலை என்பது “அயிரை மலை, நேரிமலை, செருப்பு மலை, நன்றா மலை” ஆகியவற்றைக் குறிப்பதாகும். சேரநாட்டுத்துறைமுகம் என்பது “தொண்டித்துறைமுகம், மாந்தைத் துறைமுகம், முசிறித் துறைமுகம்” ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

**சேர நாட்டு மொழி**

“சோழ நாடு பாண்டிய நாட்டைப் போல் இன்றைய சேர நாடு தமிழ் மொழி வழக்கு இழந்து வேற்று மொழியான மலையாள மொழி வழக்குடையதாகிவிட்டது

என்றாலும் அது நில நூல் வழக்கில் சேர மண்டலக்கரை என்றேகுறிக்கப்படுவது தமிழ்நாட்டுக்குரிய பெருமை” என்கிறார் புலவர் குழந்தை.

**சேரர்களுக்கு வழங்கும் மரபுப் பெயர்கள்**

சங்க இலக்கியங்களில் சேர மன்னர்களுக்குப் பல சிறப்புப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இப்பெயர்கள் குடிப்பெயராகவோ இயற்பெயராகவோ இருக்கலாம் என்று ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். அப்பெயர்கள் முறையை “வானவன், வானவரம்பன், வில்லவர், குடவர், குட்டுவன், குடக்கோ, பொறையன், இரும்பொறை, கடுங்கோ கோதை, மலையர்” என்பனவாகும்.

பிங்கல நிகண்டினில் சேரர்களைக் குறிக்கும் பெயர்களாக பல பெயர்கள் குறிப்பப்பட்டுள்ளது அவை முறையே, பூழியன், உதயன், கொங்கன் பொறையன், வானவன், குட்டுவன் வானவரம்பன், வில்லவன், குடநாடன், வஞ்சிவேந்தன், கொல்லிச் சிலம்பன், கோதை, கேரளன், பொருநைத் துறைவன், போந்தின் கண்ணியன் மலையன், மலையமான் போன்ற பெயர்களாகும். இதனையே

“பூழிய னுதியன் கொங்கன் பொறையன் வானவன் குட்டுவன் வானவ ரம்பன் வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன் கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன் பொருநைத் துறைவன், போந்தின் கண்ணியன் மலையன், மலையமான் சேரன் பெயரே”6

என்று எடுத்துரைக்கின்றதன் மூலம் சேரர்களின் பெயர்களை அறிய முடிகின்றது.திவாரநிகண்டிலும் வானவர்கள் இமயமலையில் வாழ்ந்த வானவருடன் உறவு கொண்டாடினர் என்பதை சிலப்பதிகாரத்தில்,

“மாநீர் வேலிக் கடம்பெறிந்து இமயத்து வானவர் மருள மலைவிற் பூட்டியவானவர் தோன்றல் வாய்வாட் கோதை”8

என்று குறிப்பிடுகின்றது. பதிற்றுப்பத்தினை சேரர்களின் பிறப்பு தொடர்பை குறிக்கும் முறையில் இவர்களை வானவரம்பன் மற்றும்இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்றும் இரண்டாம் இமயவரம்பன் செங்குட்டுவன் என்றும், முதலாம் வானவரம்பன் நார்முடிச்சேரல் என்றும், இரண்டாம் வானவரம்பன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்றும் குறிப்பிடுகிறது .

வானவர் என்ற பெயரைப் பெற்றதால் இவர்கள் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் என்பர். ஆனால் இக்கருத்தினை மறுத்து சேரர்கள் மேட்டு நிலப் பகுதியான மலை நாட்டுக்கு உரியவர் என்பதை பொருத்தமானது”என்கிறார் சுப்பிரமணிய பிள்ளை .

குட்டநாட்டை ஆண்டவர் குட்டுவா என்றும் குடநாட்டை ஆண்டவர் குடவர் என்றும் மலையை ஆண்டதால் பொறையர் என்றும் பூழியர் என்றும் பல பெயர்களில் சேரர்கள் அழைக்கப்படுகின்றனர் .

**வீரம்**

வீரம் என்பது மன்னனுக்குள்ளே வாழும் உயிரோட்ட குணமாகும். அஞ்சாமை, அறிவு, கவலையின்மை, மன தைரியம், உடல் வன்மை இவை எல்லாம் வீரத்தன்மையை நிலைநிறுத்தும் சாதனங்களாகும். போர்க்களத்தில் முன்வைத்த காலைப் பின் வைக்காமல் எதிர்த்து நின்று போர் செய்து வெற்றி பெறுவது அல்லது உயிர் விடுவதோ வீரம் கிடையாது. மாறாகத்தான் ஆராய்ந்து கொண்ட கொள்கையை விட்டுக் கொடுக்காத நிறைவேற்றதலை வீரமாகும். இவ்வகையில் ஆராயும் போது போர்க்களத்தில் புகுந்து, புறமுதுகு காட்டாது போர் செய்வதும் தான். எத்தொழிலை மேற்கொண்டாலும் அத்தொழிழுக்குரிய கடமைகளைத் தவறின்றி செய்வதும் தன் மனதில் உள்ள எண்ணங்கள் எச்சமயத்திலும் யாருக்கும் அஞ்சாது உண்மையுடன் எடுத்துரைப்பதை வீரமாகும். ”உறுதியான எண்ணங்கள், செயல்கள், கொள்கைகள், நடத்தைகள், சொற்கள் யாவுமே வீரம்” என்கிறார் சாமி சிதம்பரனார் .

**போர்**

சங்க காலத்தில் மக்கள் தங்களை ஆளும் மன்னர்களால் தான் வளமாகவும் நலமாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதை அளந்தறியும் போது அதற்கு முதன்மை காரணமாக விளங்கியது மன்னர்கள் மேற்கொண்ட போராகும். ஏனென்றால் இயற்கையே நாட்டை வளப்படுத்துகின்றது என்றாலும், இயற்கை கூட கைவிட்டாலும் மக்களை மன்னன் கைவிட்டதில்லை என்பதை இலக்கியப் பாடல்களே சான்றளிக்கின்றன. வீரத்தை மெய்ப்பிக்கவும் சமுதாயத்தின் தேவைக்கும் புகழ்பெற வேண்டும் என்ற ஆர்வமும் போர் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளன. ”இயல்பான மறப்பண்பு, மண்ணாசை, இடஞ் சிறிதென்னும் ஊக்கமேலீடு, அரசுரிமை, மானக்குறைவு உண்டாக மாற்றார் நடத்தல், மகள் மறுத்தல் ஆகிய காரணங்களில் போர் தோன்றக்கூடும்” என்கிறார் க. வித்தியானந்தன். போரானது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது என்பதை ,

“ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்உலகத்து இயற்கை “8

என்று சுட்டுகின்றதை கொண்டு அறிந்திடலாம்.

மன்னர்கள் போரிடுவதை புலவர்கள் கடிந்து கூறவில்லை என்பது அவர்களின் பாடல்களை சான்றாதாரமாக விளங்குகின்றன. ஆனால் அறம் மீறிய போரினையும், அர்த்தமற்ற போரினையும் புலவர்கள் தடுத்து நிறுத்துவதற்கு தயங்கவில்லை என்பதும் பாடல்களின் வழி பதிற்றுப்பத்தின் மூலம் சேரனின் ஆட்சித் திறனை அறிய முடிகின்றது .

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் மனிதநேயம் என்ற உணர்வு பல புலவர்களால் தங்கள் படைப்புகளில் கூறப்பட்டு இருக்கிறது. அவ்வகையில் சேர மன்னர்களைப் பற்றி பாடக்கூடிய பதிற்றுப்பத்து என்ற இலக்கியமானது சேரர்களின் வீரம், போர், கொடைச்சிறப்பு, சேரனின் சின்னஙங்கள், சேரனின் படைகள் மற்றும் ஒவ்வொரு மக்களின் மீதும் தாங்கள் கொண்ட அன்பு நிலையை அழகாக விளக்குகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல். பொரு. மர. 72:1-4 பக். எண் 327
2. பிங்கல. 759:1-2 பக். எண் 71
3. பிங்கல. 767:1-2 பக். எண் 70
4. குறள். 381 பக். எண் 169
5. பிங்கல. 758:1-2 பக். எண் 71
6. பிங்கல. 745:1-6 பக். எண் 71
7. சிலம்பு25:1-3 பக். எண் 336
8. புறம். 76:1-2 பக். எண் 136

**துணைநூற்பட்டியல்**

1. அ. ஆலிஸ், பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை, பதிப்பு ஆண்டு 2004.
2. எம். கௌரிமாரீஸ்வரி தமிழ் பேரகராதி, தமிழ் பல்கலைக்கழகம், வெளியிட்ட ஆண்டு 1984.
3. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும். வெற்றிச் செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர், பதிப்பு 2016.
4. திருக்குறள் தெளிவுரை க.ப அறவாணன், மாணவர்மறு தோன்றி அச்சகம், சென்னை, முதல் பதிப்பு 2007.
5. சே.நமசிவாயம், தமிழர் உணவு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு ஆண்டு 2003.
6. புறநானூறு முதலாம் பகுதி சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும் தொகுதி 13, வர்த்தமானன் பதிப்பக வெளியீடு.
7. புலியூர் கேசிகன் சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை.

இணையவழிச் சான்று

https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0515_01 pdf